Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 05
வெள்ளிக்கிழமை
01 டிசெம்பர் 2023
கார்த்திகை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"திம்புவில தொடங்கினது இப்ப டில்லியில வந்து நிக்கிது.. பாப்பம், இதாவது சரி வருமோ எண்டு"



# புதுடில்லியில் புதிய வியூகம்?

## பல்வேறு தரப்பினருடனும் தமிழ்த் தலைவர்கள் சந்திப்பு

**கொழும்பு, டிசெம்பர் 1**

**தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குச் சென்று அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றனர். ஆனும் பாரதிய ஜனதாக் கட்சியினருடன் நேற்றுமுன்தினம் சிறப்புக் கலந்துரையாடல்களிலும் அவர்கள் ஈடுபட்டனர்.**

15

## அதிகரித்தது பணவீக்கம்!

கொழும்பு, டிசெ. 1

நாட்டின் பணவீக்கம், 2023ஆம் ஆண்டு ஒக்ரோபரில் 1.5 சதவீதத்திலிருந்து 2023 நவம்பரில் 3.4 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று மக்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-ம)

## பாக்லே நயினாதீவு விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ். மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று வியாழக்கிழமை நயினாதீவுக்குப் பயணம் மேற்கொண்டார்.

நயினாதீவு-நாகபூஷணி அம்மன் ஆலயம் மற்றும் நயினாதீவு விகாரை ஆகியவற்றில் அவர் வழிபாடுகளை மேற்கொண்டார். தொடர்ந்து நயினாதீவு விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸநாயக்க தேரருடனும், நாகபூஷணி

15

## பெற்றோல் 10 ரூபா குறைப்பு

கொழும்பு, டிசெ. 1

92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 346 ரூபாயாகும்.

15

## நாடாளுமன்றத்தை உடன் கலைக்குக

### ஜனாதிபதி ரணிலிடம் எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 1

நாடாளுமன்றத்தை உடன் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற

15

வடக்கு சுகாதார அமைச்சின்

## செயலாளராக கனகேஸ்வரன்



யாழ்ப்பாணம், டிசெ. 1

வடமாகாண சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக கனகேஸ்வரன் இன்று வெள்ளிக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய

15

வட்டு - பொன்னாலை, காரைநகர் - யாழ்.

## வீதிகளுக்கு விடிவு!

### இவ்வருட இறுதிக்குள் புனரமைப்பு பூர்த்தி

### ஈ.சரவணபவனின் கோரிக்கைக்கு அதிகாரசபை பச்சைக்கொடி



யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, பொன்னாலைப் பகுதியிலுள்ள இரண்டு வீதிகள் இவ்வருடத்துக்குள் காப்பெற் இடப்பட்டு சீரமைக்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின்

15

சீரற்ற காலநிலை

## யாழ். மாவட்டத்தில் 298 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 1

சீரற்ற காலநிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் 85 குடும்பங்களைச் சேர்ந்த 298 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார். (அ-ம-66)

## வயோதிபத் தம்பதி வெட்டிக் கொலை!

### வவுனியாவில் கொடூரம்

வவுனியா, டிசெ. 1

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் வயோதிபத் தம்பதியர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இது அந்தப் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பசுபதி வர்ணகுலசிங்கம் (வயது-72), கனகலட்சுமி (வயது-68) ஆகியோரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவர்களாவர்.

15



## முல்லை. குளங்களின் வான்கதவுகள் திறப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக சிறுகுளங்கள் மற்றும் நடுத்தரக் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்ததையடுத்து அந்தக் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் விவசாயிகள் மற்றும் தாழ்வுநிலப் பகுதிகளில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-19)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படையால் கடத்தப்பட்ட

# 11 இளைஞர்களுக்கு நீதிகோரிப் போராட்டம்

**கொழும்பு, டிசெ.1**
**கொழும்பில் கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 இளைஞர்களின் பெற்றோர் நேற்றுமுன்தினம் தங்கள் பிள்ளைகளுக்கு நீதிகோரி கொழும்பு உயர்நீதிமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அக்கறை இன்மை காரணமாக நீதி 15 ஆண்டுகள் தாமதமாகியுள்ளது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு பதிலாக சட்டமா அதிபர் திணைக்களம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொடவுக்கு ஆதரவளிக்கின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எங்கள் பிள்ளைகளை யார் கடத்தினார்கள் என்பதற்கான அனைத்து ஆதாரங்களும் எங்களிடம் உள்ளன. பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விவரங்கள் கூட எங்களிடம் உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ-இ)



## தேசபந்துவுக்கு கடும் எதிர்ப்பு!

கொழும்பு, டிசெ.1
பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளமை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் செயல் என இலங்கை கத்தோலிக்க திருச்சபை கண்டித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த நியமனத்தை கர்தினால் மல்கம் ரஞ்சித் கண்டித்துள்ளார். நாங்களும் இதைக் கடுமையாக எதிர்க்கின்றோம் என்று அருட்தந்தை சிறில்காமினி தெரிவித்துள்ளார். (எ-44)



## காலநிலை நீதிக்கு மன்றம்

### வெளிவிவகார அமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ.1
காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்குத் தேவையான கொள்கைகளைத் தயாரிப்பதற்கும் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை சர்வதேச சமூகத்திடமிருந்து பரிமாறிக்கொள்வதற்கும் இலங்கையின் தலைமையில் 'காலநிலை நீதிக்கான மன்றம்' உருவாக்குவதற்கான முன்மொழிவை ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்- இவ்வாறு ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். (ச-44)

## பொறுப்பேற்றார் தேசபந்து

கொழும்பு, டிசெ.1
பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோன் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ்மா அதிபராக நேற்றுமுன்தினம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தார். (எ-இ)

## ப்ரெடிக்கு திமோர் அரசு கௌரவம்!

**யாழ்ப்பாணம், டிசெ. 1**
**இலங்கையைச் சேர்ந்த துடிப்புடைய ஊடகவியலாளரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான ப்ரெடி கமகேவுக்கு கிழக்குத் திமோர் அரசால் 'திமோர் லெஸ்டே' என்ற கௌரவம் கடந்த 27 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.**

**வேறொரு நாட்டின் பத்திரிகையாளர் ஒருவர் கிழக்கு திமோரின் தலைநகரில் பாராட்டப்படுவது இதுவே முதற் தடவையாகும். கிழக்குத் திமோரின் சுதந்திரத்துக்கான பரப்புரையில் அவர் ஆற்றிய பங்களிப்பை பாராட்டும்முகமாக இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. (ச-125)**

## சுகாதாரக் குறைபாடு உணவகத்துக்குச் 'சீல்'

யாழ்ப்பாணம், டிசெ.1
சுகாதாரக் குறைபாடுகளுடன் கல்வியங்காட்டில் இயங்கிவந்த உணவகமொன்று 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் நல்லூர்ப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பு. ஆறுமுகதாசன் தலைமையிலான குழுவினர் கடந்த திங்கட்கிழமை கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள உணவகங்களில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அங்குள்ள உணவகமொன்று காலாவதியான உணவுப் பொருள்களை வைத்திருந்தமை மற்றும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை ஆகியன கண்டறியப்பட்டன.

அதனையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும்வரை குறித்த உணவகத்தை 'சீல்' வைத்து மூடுமாறு உத்தரவிட்டார். (ச-26,27)



## சீனாவின் பங்களிப்பில் கேபிள் கார்ச் சுற்றுலா!

கொழும்பு, டிசெ.1
சீனாவின் சர்வதேச கட்டட இயந்திரக் கூட்டுத் தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்பு நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி இலங்கையில் முதலாவது கேபிள் கார்ப் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள பல்லுயிர் பெருக்க வளாகமாக விளங்கும் அம்புலுவாவவில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.


இந்தத் திட்டத்துக்காக சுமார் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1
வடமராட்சி அல்வாய் கிழக்குப் பகுதியில் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்ததேகநபர்கள் மூவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை விளக்கமறியலை எதிர்வரும் 12ஆம் திகதிவரை நீடித்தார். (எ-100)

## சமிந்து, ஹரக் கட்டா மலேசியாவில் கைது



கொழும்பு, டிசெ. 1
பாதாள உலகக் கும்பலின் முக்கியஸ்தர்களான குடு சமிந்து, ஹரக் கட்டா ஆகிய இருவரும் கடந்த சனிக்கிழமை மலேசியாவில் பதுங்கியிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் டுபாய் சென்று அங்கிருந்து மலேசியா சென்றுள்ளரெனத் தெரியவந்துள்ளது. குடு, ஹரக் இருவரும் தற்போது சட்டத்தரணிகளின் உதவியுடன் மீண்டும் டுபாய் செல்ல முனைந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)


## ரயில் தட திருத்தத்தை பார்வையிட்ட பாக்லே

யாழ்ப்பாணம், டிசெ.1
இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கொழும்பிலிருந்து மதவாச்சிக்கு ரயிலில் சென்று மதவாச்சியிலிருந்து வவுனியா வரையான ரயில் தடத் திருத்தவேலைகளைப் பார்வையிட்டார். இந்த ரயில் தடம் இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் அண்மையில் திருத்தப்பட்டிருந்தது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரச் சீரமைப்புக்குள் செல்ல வேண்டியது கட்டாயம்

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ.1

**நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குக் கடுமையான பொருளாதார மறுசீரமைப்பு அவசியம். நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமானால், இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்புக்குள் நாம் செல்லவேண்டும். இதன்மூலமே வீழ்ச்சியடையாத வலுவான பொருளாதாரத்தை உருவாக்கமுடியும்.**

- இவ்வாறு கொழும்பு ஷங்கரில்லா ஹோட்டலில் இடம்பெற்ற பொருளாதார மாநாட்டின் ஆரம்ப உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"பொருளாதார மீட்சிக்காகக் கடந்த வருடத்தில் நாம் முன்னெடுத்த வேலைத்திட்டத்தை பொருளாதார மறுசீரமைப்பு என்று கூற முடியுமா? எனத் தெரியவில்லை. எதிர்வரும் டிசெம்பரில் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதல் மீளாய்வை சர்வதேச நாணயநிதியம் நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நாடாக நாம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவிருக்கும் பொருளாதாரக் கொள்கைகள் இந்தப் பேச்சுகளில் உள்ளடங்கும். அதிலிருந்து நாம் பின்வாங்கினால், கடன் வழங்குநர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்படுவார்கள். இந்த நீண்டகால உடன்படிக்கையை இழந்தால் அடுத்து யார் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்க முடியாது" என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

# மாயமான 50 லட்சம் விசாரணை முடியவில்லை

கொழும்பு, டிசெ.1

மத்திய வங்கியிலிருந்த பணம் காணாமற்போய் மீண்டும் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் இன்னமும் முடியவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் மத்திய வங்கியிலுள்ள இரும்புப் பெட்டகம் ஒன்றிலிருந்து 50 இலட்சம் ரூபா காணாமற்போய் பின்னர் கண்டெடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக உள்ளக விசாரணைகள் குற்றவியல் திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

# எஸ்.எல்.சி. மீதான தடை நீக்கம்: இந்தியத் தூதுவருடன் ஆராய்வு

## சஜித் விளக்கமளிப்பு



கொழும்பு, டிசெ.1

சர்வதேச கிரிக்கெட்சபை இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு (எஸ்.எல்.சி.) எதிராக விதித்துள்ளதடையை நீக்குவது பற்றி எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தியத் தூதுவருடன் கலந்துரையாடியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும் பங்குபற்றியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்சபை இலங்கைக்கு எதிராக விதித்துள்ள தடையை நீக்குவது பற்றியே கலந்துரையாடப்பட்டதாகவும், வேறு எந்த அரசியல் நோக்கமுமில்லை எனவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ஒ-6)

# 6 மாதங்களில் "லைசென்ஸ்"



கொழும்பு, டிசெ.1

வழங்கப்படாமல் தேங்கிக் கிடக்கும் அனைத்துச் சாரதி அனுமதிப் பத்திரங்களையும் எதிர்வரும் 6 மாதங்களுக்குள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

கடந்த சில காலமாக அச்சு இயந்திரங்கள் பற்றாக்குறை மற்றும் பழுது காரணமாக 9 இலட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தேங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

# 21,000 மில். ரூபா பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

கொழும்பு, டிசெ.1

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளில் சுமார் 21 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கையிருப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

போதைப்பொருளுடன் 14 வெளிநாட்டவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமான மூன்று படகுகளும், உள்ளூர் மக்களுக்குச் சொந்தமான 43 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-இ)




இப்ப வாசிக்கிற பழக்கம் எங்களிட்ட இருந்து துலைஞ்சு போய்க்கொண்டிருக்குது. எல்லாரும் போனில வாறதுகளை மேலோட்டமா மேயிறதோட தங்கட வாசிப்பை முடிச்சுக் கொள்ளுகினம். எங்கையாவது ஒரு சிலர்தான் இன்னும் புத்தகங்கள், பேப்பர்களை வாசிக்கிறதை விடாமல் தொடருகினம். அதிலையும் இளம் ஆக்கள் வாசிப்பில இறங்கிறது அதிசயமான காலத்தில, அவைக்குத் தடை போடுற மாதிரியான வேலையளும் நடக்கத்தான் செய்யுது.

நாலைஞ்சு நாளைக்கு முன்னம் பட்சிக்கு ஒரு கோல்.

'நான் யாழ்ப்பாணம் லைப்ரரிக்குப் போனன். அங்க எங்களுக்கு வாசிக்கிறதுக்கு நேற்றையான் பேப்பரைக் கேட்டால் இல்லையெண்டு சொல்லுகினம். இண்டைக்கு மட்டுமில்லை. கனநாளா இப்பிடித்தான் பதில் சொல்லுகினம். ஒருக்கா தேடி எடுத்துத் தாங்கோ எண்டு கேட்டாலும் அதைப்பற்றி அக்கறையில்லாமல், நாங்கள் கேட்டது காதிலையே விழாததுமாதிரி அலட்சியமா அங்க வேலை செய்யிறவை இருக்கினம்.

இதுகளை ஒருக்கா பட்சி வெளிப்படுத்த ஏலாதோ?' எண்டு அங்கால பேசின ஒரு பெடியன் தன்ர ஆதங்கத்தைக் கொட்டினான். இந்தக் காலத்தில இப்பிடி வாசிப்பை நேசிக்கிற ஒரு பெடியன் தன்ர குறையைச் சொல்லேக்க அதை சாதாரணமாக் கடந்து போகவும் ஏலாதே. அதால பட்சியும் ஒருக்கா அங்காலிப்பக்கம் பறந்து பாத்திச்சுது.

பெடியன் சொன்னது உண்மைதான். வழக்கமா ஒருமாதத்துக்குரிய பேப்பருகள் எல்லாம் தனித்தனியாக் கட்டி வைச்சிருப்பினம். லைப்ரரிக்கு போறவையும் தங்களுக்குத் தேவையான திகதிக்குரிய பேப்பர்களை எடுத்து வாசிப்பினம். அதுதான் அங்க இவ்வளவு நாளும் இருந்த நடைமுறை. ஆனால் இப்ப அப்பிடி எல்லாப் பேப்பரும் ஒழுங்கா இல்லை. கன பேப்பர்கள் காணாமல் போட்டுது. சிலவேளை அங்க வாசிக்க வாறவையும் அதை அப்பிடியே அபேஸ் பண்ணியிருக்கலாம். இல்லாட்டி வேலை செய்யிறவை பேப்பர்களை வாசிக்க தங்கட வீட்டை கொண்டு போயிருக்கலாம். மற்றப்படி பேப்பருக்கு கால் முளைச்சு, லைப்ரரிச் சுவரைத் தாண்டிக் குதிச்சிருக்காது தானே.

அதோட இன்னொரு விசயத்தையும் அங்க பாக்க முடிஞ்சுது. முந்தி யாழ்ப்பாணம் லைப்ரரி இரவு 7 மணி மட்டும் திறந்திருக்கும். வேலை முடிஞ்சு வீட்ட போறவை கொஞ்சம் ஆற அமர இருந்து ஏதும் வாசிச்சுப் போட்டு போகக்கூடியமாதிரி இருந்தது. ஆனால் இப்ப என்னவெண்டால் 6 மணியோட எல்லாத்தையும் பூட்டிப்போட்டு வெளிக்கிடுகினம். இதெல்லாம் உள்ளுக்க நடக்கிறதால உரியவைக்குத் தெரியாமல் இருக்கக் கூடும். இப்பத்தை மாநகர ஆணையாளர் ஒரு நல்ல படைப்பாளி மட்டுமல்ல நல்ல வாசிப்பாளனும் தான். அவருக்கு வாசிப்பின்ர அருமை தெரியும். அதால இந்த விசயங்களைப் பற்றி உடனடி நடவடிக்கை எடுப்பார் எண்டு பட்சி நம்புது.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனை நாயகிக்கு யாழில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கான போட்டியில் இலங்கையிலிருந்து பங்கேற்று நாட்டுக்குப் பெருமை சேர்த்த ஓய்வுபெற்ற சிறைச்சாலை அலுவலர் அகிலதிருநாயகியைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் ஏற்பாட்டில் சிறைச்சாலை அத்தியட்சகர் உதயகுமார தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-23)



# மன்னார் மருத்துவமனை தேவைப்பாடு தீர்க்கப்படும்

## இந்தியத் தூதுவர் உறுதியளிப்பு

மன்னார், டிசெ. 1

மன்னார் பொதுமருத்துவமனையின் நீண்டகாலத் தேவையான விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுகளை நிறுவல் மற்றும் 'சீரி' ஸ்கானரைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கு நிதியுதவி பெற்றுத்தர வழிவகுக்கப்படும் என்று இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே உறுதியளித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அழைப்பையேற்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் மருத்துவமனைக்கு களப்பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போதே மருத்துமனையின் தேவைப்பாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்த இந்தியத்தூதுவர், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ச-60)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரித்து, உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்காலத்துக்குப் பயன் தரும் செயற்பாட்டில் ஈடுபடுவீர்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். தொல்லைகள் விலகும்.

**கன்னி:** தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் மூலம் கிடைக்கும் செய்தி அளவற்ற மகிழ்ச்சி தருவதாக இருக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். வீண்செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவி செய்வார்கள். உடல் அசதி ஏற்படும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** சில சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிரச் னைகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது அவசியம்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயல்படுவீர்கள். எதிர்பாராத பண லாபம் உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

# பரிசளிப்பு சரசாலையில் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 1

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்படும் பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமி பங்கேற்கவுள்ளார். (ச-131)

# கல்வி மறுசீரமைப்புக்கு 10 ஆண்டுகள் செல்லும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1

கல்விமறுசீரமைப்புநடவடிக்கை முற்றாக முழுமைபெறுவதற்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வரை செல்லும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி மறுசீரமைப்பை இரு வருடத்துக்குள் செய்யமுடியாது. மறுசீரமைப்பு நடவடிக்கை நிறைவுபெற குறைந்தபட்சம் 10 வருடங்கள்வரை செல்லும். கல்விக் கொள்கைத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையிலும் அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, அது தற்போது துறைசார் மேற்பார்வைக் குழுவின் கண்காணிப்பில் உள்ளது.

மேலதிக யோசனைகள் உள்ளடக்கப்பட்டு அனுப்பப்பட்ட பின்னர் அத்திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

தரம் ஒன்று முதல் ஐந்து வரை உள்ள மாணவர்களுக்கு பரீட்சை நடவடிக்கையை முடிந்தளவு குறைத்துவிட்டு, வகுப்பறையில் செயற்பாட்டுக் கல்வியை வழங்குவதுபற்றிகவனம் செலுத்தப்பட்டுள்ளது. கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது உரிய தினத்தில் பரீட்சைகளை நடத்தவும், உரிய காலப்பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடவும் உத்தேசித்துள்ளோம்- என்றார். (ஒ-44)

# நாவலர் குருபூசை ஓவியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 1

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார கற்கைகள் நிறுவகம் மற்றும் ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையம் ஆகியவற்றினூடாகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப்போட்டி, பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஓவிய ஆர்வலர்களுக்கான நேரடி ஓவியப்போட்டி மற்றும் ஆறுமுகநாவலர் பரீட்சை என்பனவே நடத்தப்படவுள்ளன.

அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்ற கருப்பொருளில் வரையப்படும் ஓவியங்களை நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பவேண்டும்.

நேரடி ஓவியப்போட்டியில் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளமுடியும். இந்தப் போட்டி நாவலர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறவுள்ளது.

ஆறுமுக நாவலர் பரீட்சை, தரம் - 3, 4, 5 கீழ்ப் பிரிவு மாவணவர்களுக்கு எதிர்வரும் 11ஆம் திகதியும் தரம்- 6, 7, 8 மத்திய பிரிவு மாணவர்களுக்கு மறுநாள் 12ஆம் திகதியும் தரம் - 9, 10, 11 மேற்பிரிவு மாணவர்களுக்கு எதிர்வரும் 13ஆம் திகதியும் மாலை 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டிகளில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்யவும் குறித்த போட்டிகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறுவதற்கும் 077 9117954 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-100)

# புலமைப்பரிசில் பெறுபேறுகள்

**யாழ்.அல்லைப்பிட்டி றோ.க.த.க.வித்தியாலயம்**

அ.அக்ஷிகா - 177, ய.துஷானி - 168, செ.நெமிஷா- [illegible]5, பி.பியானுஜா - 162, ச.சாருஜா - 160

**வவுனியா வீரமணிக்கன்குளம் திருமகள் வித்**[illegible]

பி.துசிபிரியந்தனன் - 166

**ஓமந்தை புதியவேலர் சின்னக்குளம் ஆனந்தகுமாரசுவாமி வித்தி.**

ஜெ.யொஸ்லினா- 150

**நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்**

பி.ஷக்சயா - 156, வ.தனுசியா- 154, ச.காருண்யா - 138, ர.செரோன் - 123, இ.ஹரினி - 112

**கிளிநொச்சி மாசார் அ.த.க. பாடசாலை**

ய.கர்ஷாந் - 180, ந.விகாஷ் - 150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(A/L) சித்தியடைந்த 18+ SMARTGEN கணக்குரிமையாளர்களுக்கு

# நென ஜய புலமைப்பரிசில்

உ/த பரீட்சையில் சாதனைபடைத்த 18+ கணக்குரிமையாளராக எதிர்காலத்தை வென்றிட இன்றே விண்ணப்பியுங்கள்.

## நென ஜய சிறப்புப் புலமைப் பரிசில்

- மாதமொன்றுக்கு ரூ.2500 வீதம் 4 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.120,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2022ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score ஐ பெற்றுக் கொண்ட, BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ, மாணவியருக்கு 83 புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். (BOC யின் 83 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு)

## நென ஜய திறமைக்கான புலமைப் பரிசில்

- மாதமொன்றுக்கு ரூ.2000 வீதம் 3 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.72,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2021ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score ஐ பெற்றுக் கொண்ட BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கு 300 புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

## நென ஜய புலமைப் பரிசில்களுக்கான தகைமைகள்

- உயிரியல் விஞ்ஞானம்/பௌதீக விஞ்ஞானம்/வர்த்தகம்/கலை/உயிரியற் கட்டமைப்புத் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பிரதான 6 பாடப்பிரிவுகளின் கீழ் 2022ம் ஆண்டில் நாடளாவிய ரீதியிலும், அவ்வாறே மாவட்ட மட்டத்திலும் உயர் பெறுபேறுகளைப் பெற்ற BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியர் இப் புலமைப் பரிசில்களுக்காக விண்ணப்பிக்கலாம்.

- 2022 ஒகஸ்ட் 1 முதல் 2023 ஜனவரி 31 வரை தொடர்ச்சியாக உங்களது கணக்கில் ஆகக்குறைந்தது 10,000 ரூபாயினை அல்லது 2023 ஜனவரி 23 தொடக்கம் 2023 ஜூலை 22 வரை தொடர்ச்சியாக 6 மாதங்கள் ஆகக்குறைந்தது 10,000 ரூபாயினை உங்கள் கணக்கில் பேணியிருக்கவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை வங்கியின் BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருப்பவர்கள் பாஸ்போர்ட் அளவிலான வர்ணப் புகைப்படத்துடன், www.boc.lk இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொண்ட (Download) விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), சந்தைப்படுத்தல் பிரிவு, 16ம் மாடி, இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம், கொழும்பு 01. என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிகத் தகவல்களை BOC இணையத் தளத்திலிருந்தும், FACE BOOK பக்கத்திலிருந்தும் மற்றும் நாடுமுழுவதிலுமுள்ள BOC கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

"விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2024 ஜனவரி 31"

அத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE

www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றமா அமைச்சரவையா?

## விளக்கம் கேட்கும் ஜனாதிபதி செயலகம்

**கொழும்பு, டிசெ.1**


**அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்ற சிறப்புரிமையின் கீழ் கேள்வி எழுப்ப முடியுமா? என ஜனாதிபதி அலுவலகம், சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளது.**

பாதீட்டு விவாதத்தின்போது சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவைத் தீர்மானங்களை சிறப்புரிமைப் பிரச்சினைகளாகக் கருதி சவாலுக்கு உட்படுத்துகின்றனர் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதனைக் கவனத்தில் கொண்டு இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி அலுவலகத்துக்கு அறிவித்துள்ளார்.

இவ்வாறான சிறப்புரிமை விடயங்களை முன்வைப்பது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாக அமையுமா? என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அலுவலகம், சட்டமா அதிபரிடம் கோரியுள்ளது.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஜனாதிபதியை இணைத்துக்கொண்டு நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினைகளை எழுப்புவதற்கான இயலுமைகள் தொடர்பிலும் ஜனாதிபதி அலுவலகம் சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளது. (எ-இ)



## வீதி அபிவிருத்திகளுக்கு ஆசிய வங்கி கடனுதவி!

கொழும்பு, டிசெ.1

பொருளாதார நெருக்கடி நிலையால் தடைப்பட்டுள்ள நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனுதவி பெறப்படவுள்ளது.

இரண்டாவது ஒருங்கிணைந்த சாலை முதலீட்டுத் திட்டத்தின் கீழ் கடன் தொகையைப் பெற இலங்கை திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது. (ச-இ)

## ஆணுறை இயந்திரத்தை மீள நிறுவுவதற்குத் திட்டம்

கொழும்பு, டிசெ.1

எயிட்ஸ் பரவுவதைத் தடுப்பதற்காக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆணுறை விற்பனை இயந்திரத்தை மீண்டும் அமைக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது என்று எய்ட்ஸ் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜானகி வித்யாபத்திரன தெரிவித்துள்ளார்.

2017ஆம் ஆண்டு முதல் இந்த ஆணுறை விற்பனை இயந்திரம் ரயில் நிலையங்கள் மற்றும் பொது இடங்களுக்கு அருகில் நிறுவப்பட்டது. பின்னர் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. (எ-இ)

## மின்சாரம் தாக்கி தந்தை, மகள் சாவு

கொழும்பு, டிசெ.1

கண்டி, புசல்லாவையில் சட்டவிரோத மின் கம்பியில் சிக்கி தந்தையும், மகளும் உயிரிழந்துள்ளனர்.

32 வயதான தந்தையும், 2 வயதும் 8 மாதங்களான மகளுமே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## மருத்துவசேவை அபாயத்தை நோக்கும் தமிழ்ப் பிரதேசங்கள்

### சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 1

வடக்கு மாகாணம் உள்ளிட்ட தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள 40 மருத்துவமனைகள் ஆளணிப்பற்றாக்குறையால் மூடவேண்டிய அபாயத்திலும் 100 மருத்துவமனைகள் விளிம்பு நிலையிலும் காணப்படுகின்றன.

சுகாதார அமைச்சில் கடந்த திங்கட்கிழமை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

மருத்துவர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கான பற்றாக்குறை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மருத்துவர்கள் வெளியேற்றம், ஓய்வு, இடமாற்றம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் இதில் தாக்கம் செலுத்துகின்றன.

வடக்கு மாகாணம். புத்தளம், நுவரெலியா போன்ற பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-6)



## திருமறைக் கலாமன்ற 59ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 1

திருமறைக் கலாமன்றத்தின் 59 ஆவது தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள கலைஞானசுரபி மன்றத்தின் தியான இல்லத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து மு.ப. 10மணிக்கு பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் மன்ற அலுவலகம் கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வும், கலைநிகழ்ச்சிகள் பி.ப. 4மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் .பிராந்திய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள், அண்மையில்திருமறைக்கலாமன்றத்தால்நடத்தப்பட்ட யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து மரபு ஓராள் ஆற்றுகைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு, கலைஞர் கௌரவிப்பு, சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'நொண்டி நாடகம்' தென்மோடி நாட்டுக்கூத்து என்பன இடம்பெறவுள்ளன. (எ-ரி)

## விளையாட்டு இராஜாங்க அமைச்சு இடமாற்றம்

கொழும்பு, டிசெ.1

விளையாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஹரின் பெர்னாண்டோ, விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சை உலக வர்த்தக மையத்தில் இருந்து கொழும்பு-7 இல் உள்ள விளையாட்டு அமைச்சின் கட்டடத்துக்கு மாற்றியுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் செலவினத்தைக் குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ-இ)



## கிராமஅலுவலர் வெற்றிடம் துரிதகதியில் நிரப்பப்படும்

### பரீட்சை நாளை

கொழும்பு, டிசெ. 1

வெற்றிடமாகவுள்ள 2 ஆயிரத்து 700 கிராமஅலுவலர் பதவிகளுக்கான பரீட்சை நாளை 2ஆம் திகதி இடம்பெறும். எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் அவர்களை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள 8 ஆயிரத்து 400 தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும். தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள 3 ஆயிரம் அரச ஊழியர்களின் மேன்முறையீட்டு மனுக்களைப் பரிசீலித்து மீண்டும் அவர்களை சேவையில் அமர்த்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களும் நிபந்தனையின் கீழ் அவர்கள் ஒரு மாத காலத்துக்குள் பணியில் அமர்த்தப்படுவர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புத்தியைத் தீட்டுவோம்

போரின்பின்னர்கடந்தகாலங்களைக்காட்டிலும் இம்முறை அதிகளவான மக்கள் மாவீரர் நாளை நினைவுகூர்வதற்கு அணி திரண்டிருந்தார்கள். பொலிஸார் நீதிமன்றங்கள் ஊடாக, தடைகளை ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்திருந்த நிலையில், மக்கள் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களைப் பூசித்தார்கள். மாவீரர் நாள் என்பது தமிழ் மக்களின் உணர்வுடன் இரண்டறக் கலந்தது தான். அதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால் தற்போதுள்ள சூழலில் மாவீரர்நாளை உணர்வெழுச்சியாகக் கடைப்பிடிப்பதற் காக அதனை எதிர்காலத்தில் குழப்பியடிக்கும் விதத்திலோ அல்லதுசிக்கல்களில்மாட்டிக்கொள்ளும்வகையிலோ யாரும் அணுகக்கூடாது. நீதிமன் றங்கள் ஊடாக தடையைப் பெற்றுக் கொள்வதற்கு பொலிஸார் எவ்வளவு தீவிரத்துடன் செயற்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மாவீரர் நாளை திட்டமிட்டுக் குழப்புவதன் ஊடாக எதிர்காலத்தில் நீதிமன்றங்கள் அவற்றைத் தடைவிதிக்கச் செய்யும் வகையிலான நகர்வுகளையும் முன்னெடுப்பார்கள் என்பதையும் விளங்கிக்கொள்ளவேண்டும்.

ஆனால், மாவீரர்நாளன்று நடந்த சில சம்பவங்கள் மிகப்பெரிய பிரச்சினையை உருவாக்கியிருக்கின்றன. கொடிகாமத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ் வில் பங்கேற்ற ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் அந்த அமைப்பின் தலைவர் மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது படம் பொறிக்கப்பட்ட ரீ-சேர்ட் அணிந்திருந்தார். அதே போன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாக நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் பங்கேற்ற 3 சிறுவர்கள், போராளிகள் அணிவதைப் போன்ற ஆடைகள் மற்றும் அவர்கள் கழுத்தில் தொங்க விட்டிருப்பதைப் போன்று இலக்கத்தகடு மற்றும் சயனைட் குப்பி என்பவற்றை அணிந்திருந்தார்கள். இந்தச் சிறுவர்களின் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன. விடுதலைப் புலிகளின் இலச்சினையுடன் கொடிகாமம் மாவீரர் நாள் நிகழ்வில் பங்கேற்றவர் கைதாகியிருக்கின்றார். சிறுவர்களும் அவர்களது பெற்றோரும்விசாரணைக்குஅழைக்கப்பட்டிருக்கின்றனர்.


மாவீரர் நாளைக் கடைப்பிடிப்பதற்கு நீதிமன்றங்கள் அனுமதிக்கும்போது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் சின்னங்களைப் பயன்படுத்துவ தற்குத் தடை விதித்துள்ளன. எனவே அதை மீறும் வகையில் செயற்படுவதானது எதிர்காலத்தில் மாவீ ரர் நாள் நினைவேந்தலுக்கான தடையை, பொலிஸார் தடையை நீதிமன்றம் ஊடாகப் பெறுவதற்கு வழிகோலிவிடும்.

இலங்கையின் சட்டதிட்டங்களுக்குள் உள்ள நெளிவு சுழிவுகளைப் பயன்படுத்தி, புத்திசாலித்தனமான மாவீரர் நாளைக் கடைப்பிடிக்கவேண்டுமே தவிர, உணர்ச்சிவசப்பட்டு எல்லாவற்றையும் போட்டுடைத்து விடக்கூடாது. நாம் புத்திசாதுரியத்துடன் விடயங்களை நகர்த்தவேண்டும். மாவீரர் நாளை நடத்துவதற்கு ஒவ்வொரு துயிலும் இல்லங்களிலும் ஏற்பாட்டுக் குழு இருக்கின்றது. இந்தக் குழுக்கள் மாவீரர் நாளுக்கு வருபவர்கள், அவர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் கண்ணும் கருத்துமாகச் செயற்படவேண்டும். மாவீரர் நாள் நிகழ்வுக்கு நிரந்தரத் தடையை ஏற்படுத்துவதற்காக புல்லுருவிகளே அதி தீவிர தேசியப் பற்றாளர்கள் போல் களமிறக்கப்படலாம். எனவே உணர்ச்சி நிலையிலிருந்து எல்லாவற்றையும் நோக்காது அறிவுபூர்வமாகவும் சிந்திக்கவேண்டும்.



# இலங்கையில் தொடரும் இந்தியா - சீனா போட்டி

கொழும்பு, டிசெ.1



**இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே சீனாவின் எரிசக்தி நிறுவனமான சினோபெக் நிறுவனம் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான புதிய பெற்றோலிய சுத்திகரிப்பு ஆலையை அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.**

இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவின் பிரபல தொழில் நிறுவனமான அதானி குழுமம் கொழும்பில் துறைமுக முனைய திட்டத்தை மேற்கொள்கிறது. அதையடுத்து இந்தியாவின் அதானி மற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்குப் போட்டியாக இலங்கையில் பெரும் தொகையை முதலீடு செய்கிறது சீனா. சீனாவின் சினோபெக் நிறுவனத்தின் முதலீடு இலங்கை ரூபா மதிப்பில் 120 ஆயிரம் கோடி ரூபாவுக்கு அதிகமாகும். இந்த முதலீட்டுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதானி குழுமம் முதலீடு செய்யும் நிலையில் சீனாவும் இலங்கையில் பெரிய முதலீட்டைச் செய்திருப்பது இலங்கையை தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற சீனாவின் இராஜதந்திரம்தான் என்று கூறுகின்றனர் அரசியல் விமர்சகர்கள். (எ-இ)

# மறுசீரமைப்புகளில் மாற்றம் ஏற்படாது

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

சர்வதேச நாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட இரண்டாம் தவணைக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெற்றுள்ளன. தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்புத் திட்டங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த மாதமளவில் இரண்டாம் கட்டக் கடன் தொகை கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கிறோம். பிரதான கடன் வழங்குநர்களான இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் சீனாவும் கடன் மறுசீரமைப்புக்குச் சார்பான நிலைப்பாட்டில் உள்ளதை வரவேற்கிறோம். நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் வங்குரோத்து நிலையில் இருந்து வெகுவிரைவில் மீள முடியும் - என்றார். (எ-இ)

## நாளை

02.12.2023

**சனிக்கிழமை**

**கார்த்திகை 16**

சுபநேரம் : 03.15 - 04.45

ராகுகாலம் : 09.15 - 10.45

## நாளொரு நல்வார்த்தை

ஒரு நெருக்கடியில் நீங்கள் எவ்வளவு சிறப்பாகச் செயற்படுகிறீர்கள் என்பதே தலைமையின் உண்மையான சோதனை!.

*- பிரையன் டிரேசி -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், டிசெ.1

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் பாலியல், சமூக, கலாசார வன்முறைகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பான கருத்தரங்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் குருபரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் பாலியல், சமூக, கலாசார வன்முறைகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது பற்றி கருத்துரையை சட்டத்தரணி தற்பரன், பல்வேறு வன்முறைகளிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாப்பது பற்றி கருத்துரையை கிருத்திகா தருமராஜா ஆகியோர் வழங்கினர். பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ரி-6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29.07.1936 — மறைவு 30.11.2023



### திருமதி நாகலிங்கம் பரமேஸ்வரி

வட்டுக்கோட்டை மூளாய் றோட்டைப் பிறப்பிடமாக வும், தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் பரமேஸ்வரி 30.11.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் பாசமிகு மனைவியும், பரமானந்தம், ராதா, ரட்ணா, நிர்மலா (கனடா), அனஷியா (ஜேர் மனி), ரவிகரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), காலஞ்சென்ற சந்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சூரியகுமாரி, பத்மநாதன், சிவபாதசுந்தரம், தில்லை நடராஜா (ஜேர்மனி), கலாதேவி (லண்டன்), ராஜேந்தினி (லண்டன்), காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டப் பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

**இறுதிரிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு, கொக்குவில்.
077 869 5084

தகவல்: குடும்பத்தினர்

(cs.27138) (N.1)

## மரண அறிவித்தல்

"ஓம் ஸ்ரீராம் ... " 

பிறப்பு 03.02.1939 — இறப்பு 29.11.2023



### நடராசா இரத்தினமணி

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் உடுவில், தாவடியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா இரத்தினமணி அவர்கள் கடந்த (29.11.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா ஆச்சிமுத்து தம்பதியரின் மூத்த புதல்வியும், கந்தையா இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், செல்வராசா, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் இராசலட்சுமி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லத்துரை, முத்தையா, திருநாவுக்கரசு மற்றும் பவளக்கொடி, காலஞ்சென்ற நடராசா மற்றும் சின்னராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், துரைராசா (லண்டன்), தெய்வேந்திராசா, கலாராணி (ஜேர்மனி), சூரியகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சசிகலா, சுசிகலா மற்றும் ரதிகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மாவதி (கொழும்பு), விக்னேஸ்வரி, காலஞ்சென்ற சோமஸ்கந்தராஜன் (ஜேர்மனி) மற்றும் ஜெயபாரதி (ஜேர்மனி), ஜெயராமன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரம்மியன் (கொழும்பு), அகல்யன் (கொழும்பு), கிருத்தியன், பேருஜன், சுலக்ஷன் (ஜேர்மனி), சுனந்தன் (ஜேர்மனி), நாகவி (ஜேர்மனி), நாகீர்த்தியன் (ஜேர்மனி), ராகவி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துரைராசா (ராசன்)-00447926365129**
**தெய்வேந்திரராசா (பவா)-0776158719**
**கலாராணி (கலா) - 00491793472313**
**சூரியகுமார் (குமார்)-00491743784899**

**தகவல்: குடும்பத்தினர்.**
**ரதிகலா (ரதி)**
**077 5550 341**

**காளிகோவிலடி, தாவடி வடக்கு, கொக்குவில்.**

CS 27149) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 22.01.1953 — மறைவு 29.11.2023



### திருச்செல்வம் சறோஜா

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் சறோஜா அவர்கள் கடந்த (29.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சின்னையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னையா திருச்செல்வத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், துஷ்யா (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம் - தீவகம்), துஷானந் (சாரதி, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), துஷாமினி (ஆசிரியர், யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), துஷாயினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவியரசி (மு.சே.உ. மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), ராஜ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்துறைத் திணைக்களம், சாவகச்சேரி), சர்வானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஓவியா, அக்ஷேத்ரா, தக்ஷன்யா, சாய்கவி, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பாஸ்கரன், ஸ்ரீதரன், கமலாகரன், தயாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்கையற்கரசி, அமிர்தலிங்கம், திருஞானச்செல்வம், செல்வராசா, இராஜநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:-
**077 111 3967, 077 711 0445,**
**077 236 5372**

தகவல்: குடும்பத்தினர்.

(GR 41251) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 29.12.1935 — இறப்பு 30.11.2023



### கனகசபை சதாசிவம்

பலாலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கோப்பாயில் வசித்துவந்தவருமாகிய கனகசபை சதாசிவம் நேற்று (30.11.2023) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தங்கத்தின் கணவரும், செல்லத்தின் சகோதரனும், ஞானாம்பிகை (ஆசிரியர், யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), கணேசமூர்த்தி (உதவித் தபாலதிபர் - தபாலகம் தெல்லிப்பளை), கணேசலிங்கம், காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் யோகாம்பிகை (Venus Hospital), கமலாம்பிகை (ஆசிரியர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி), ஸ்ரீகரன் (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாசம் ம.வி.), காலஞ்சென்ற ஜெயலக்குமி (ஆசிரியர்), திருச்செந்தூரன் (ஆசிரியர், கிளி/மாசார் அ.த.க. பாடசாலை), காலஞ்சென்ற பாஸ்கரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராசசிங்கம், றஜிகலா, றஞ்சினிதேவி, பகீதரன், சுயாத்தா (ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), லாவண்யா (அதிபர், கிளி/ அல்லிப்பளை சி.சி.த.க. வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், தக்ஷாஜினி, பகீரதி, ஜதுஷிஹா, ஆர்ணிகா, ஆருஷி, அபிமன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அதிகார் வீதி, (லில்லி கோம் லேன்), கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 8147 367, 077 650 7043**

(CS 27147) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கடந்த (13.11.2023)
திங்கட்கிழமை யாழ்ப்பாணம்
மேல் நீதிமன்ற நீதிபதி
**D.S.சூசைதாஸ்**
முன்னிலையில் அகில இலங்கை
சமாதான நீதிவானாக
பதவி ஏற்ற

**திரு. தர்மதாசன் முருகதாசன்**

அவர்களின் சேவை சிறக்க
பாராட்டிவாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**நண்பர்கள்**

(CS 27139) A-1

## வாடகைத்தாய் தேவை

குழந்தை இல்லாத தம்பதியினர் வாடகை தாய் மூலம் குழந்தை பெற்று கொள்ள விரும்புகின்றனர். வாடகை தாயாக விரும்புகின்றவர் எம்மை தொடர்பு கொள்ளவும். வயது எல்லை 25 முதல் 35 வரை உங்கள் விபரங்கள் எல்லாம் இரகசியமாக பாதுகாக்கப்படும். **மேலதிக விபரங்களுக்கு**

**சசி : 00447555593074 Whats App மட்டும்**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வணிகர் கழகத்தின் அங்கத்தவரும்,
**வேணி களஞ்சியத்தின்** உரிமையாளருமாகிய
**திரு.கு.கங்கைவேணியன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி குமாரசாமி மீனாட்சி**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று
துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.** **யாழ். வணிகர் கழகம்**

(CR 41280) A-1


## பாராட்டு

யாழ்ப்பாணம், டிசெ.1
நெல்லியடி ஜே/376 பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.செல்வச்சோதிநாதன் மனோரஞ்சிதத்தின் சேவைநலன் பாராட்டு விழா ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி சிவசிதம்பரம் நற்குணலிங்கம் தலைமையில் நெல்லியடி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. (ரி)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்
# வழங்குனர்களை பதிவு செய்தல் - 2024

வலிகாமம் மேற்கு பிரதேச சபையானது 2024ஆம் ஆண்டுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள் / வேலைகள் போன்றவற்றை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)**
- **தொகுதி "B" - சேவைகள் / வேலைகள்**
- **தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சுத்திகரிப்புச் சேவையும்**
- **தொகுதி "D" - ஒப்பந்த வேலைகள்**
- **தொகுதி "E" - உணவு வகைகள்.**

| தொகுதி A | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் / இரும்பு / உருக்கு) |
| A-03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் நிழற் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A-05 | குளியலறை பொருத்திகள், மாபிள்கள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் கட்டுமாணப் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்ப்புகள், மின் விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A-09 | சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள் மற்றும் ஏனையவை. |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோல் உற்பத்திப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-14 | கற்கள், மண் வகைகள், கூட்டெரு பசளை, தார் |
| A-15 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-16 | அலங்காரப் பொருட்கள் |
| A-17 | பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள். |
| A-18 | இரும்புப் பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள். |
| A-19 | பாதணிகள், தோல்பொருட்கள், மழைக்கவசம், கையுறை. |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-21 | அலுமினிய பிற்றிங்குடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-22 | மரக்கன்றுகள், மரம் நாற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |
| A-23 | மருந்துப் பொருட்கள் |
| **தொகுதி - B** | **சேவைகள் / வேலைகள்** |
| B-01 | மரத்தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் திருத்தம் |
| B-02 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும். |
| B-03 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணினி விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல். |
| B-04 | மின்பிறப்பாக்கி, இலத்திரனியல் சாதனங்கள், துணை பொருட்கள் திருத்தம் |
| B-05 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-06 | கோலவுடை தைத்தல், கோலவுடை வழங்குதல் |
| B-07 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-08 | கணினி பிறின்டர் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B-09 | பதிப்பக வேலை - சகலவித படிவங்களும் அச்சிடலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B-10 | பனர், ஸ்ரிக்கர், லமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள். |
| B-11 | கட்டிட அமைப்பும் திருத்த வேலைகளும் |
| B-12 | இரும்பு, [illegible] தொடர்பான பிற்றிங் வகைகள். |
| B-13 | ஏற்றியிறக்கல் சேவை (தார் முதலான வீதி திருத்தத்திற்கான மூலப்பொருட்கள், கட்டட மூலப் பொருட்கள்) |
| B-14 | கனரக வாகனங்கள் / இயந்திரங்கள் திருத்துதல் |

| தொகுதி C | வாகனத் திருத்தமும் சுத்திகரிப்புச் சேவையும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், வாகன சுத்திகரிப்பு /உராய்வு நீக்கிகள், எஞ்சின் ஒயில், சீற் குசன் வேலை. |
| C-02 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |
| C-03 | உழவு இயந்திரம், உழவு இயந்திரப் பெட்டி திருத்தம், ஏனைய வாகனங்களுக்கான திருத்தம். |
| C-04 | நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார் திருத்தம் |
| C-05 | மோட்டார் சைக்கிள் திருத்தம், சுத்திரிகரிப்பு |
| **தொகுதி D** | **ஒப்பந்த வேலைகள் (CIDA பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)** |
| D-01 | கட்டட நிர்மானமும் திருத்தமும் |
| D-02 | வீதி நிர்மானமும் திருத்தமும் |
| D-03 | கிணறு /குழாய்க்கிணறு அமைத்தல் |
| D-04 | வர்ணம் பூசுதல். |
| **தொகுதி E** | **உணவு வகைகள்** |
| E-01 | சமைத்த உணவு, சிற்றுண்டி வகைகள் |
| E-02 | குளிர்பான வகைகள், குடிநீர்ப்போத்தல்கள் |
| E-03 | உலர் உணவுப்பொருட்கள். |

**நியந்தனைகள்**

1. வழங்கல்கள் / சேவைகள் 2024 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் ரூபா 1,000.00 இனை செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
4. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகைச் செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் பிரதேச சபைக்கு உண்டு.
5. மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குனர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசோதனை செய்வதற்கான முழு அதிகாரம் சபைக்கு உண்டு.
8. எமது பிரதேச சபையில் வழங்குனர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்[illegible]கள் தத்தமது பிரதேச சபையில் 2023 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமத்தை பெற்றுக் கொண்ட[illegible] சான்றிதழின் பிரதியினை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் அவசியமாகும்.
9. விண்ணப்பப் படிவங்கள் கடித [illegible] இடது பக்க மேல் மூலையில் "வழங்குனர்களை பதிவு செய்தல் - 2024" எனக் குறிப்பிட்டு செய[illegible] [illegible]காமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்னும் முகவரிக்கு 14.12.2023 ஆம் திகதிக்கு [illegible]வுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. திருப்திகரமற்ற வழங்கல்கள் / [illegible] நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை 021 225 [illegible] எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
01.12.2023 **வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து) கைதடி கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்
## 02.12.2023 - சனிக்கிழமை

மேற்படி எமது சங்கத்தின் பதினொரு (11) கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான பொதுச்சபைக் கூட்டம் நாளை (02.12.2023) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடாத்துவதற்கு சங்கத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. குறித்த கிளைகளின் தகுதியுடைய அங்கத்தவர்களுக்கு தவிசாளரால் தனித்தனியாக கூட்ட அழைப்பு கடிதம் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாத தகுதியுடைய அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்

| இல. | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர்கள் | கிளைப்பெதுச்சபை கூட் டம் நடைபெறும் இடம் | கூட்டம் நடைபெறும் திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | கைதடி வடக்கு | திருமதி சு. ருத்சாலினி | கைதடி வடக்கு சனசமூக நிலைய கட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 02 | 02 | கைதடி மத்தி | திரு.இ.தனுசன் | சங்க கிளை கட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 03 | 03 | கைதடி மேற்கு | திரு.ச.ரதிகுலன் | கைதடி மேற்கு சனசமூக நிலையகட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 04 | 04 | கைதடி தெற்கு | திருமதி பி. ஜனனி | சங்க தலைமைகாரியால கட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 05 | 05 | நாவற்குழி | திருமதி பு. தர்சினி | சங்க கிளைக் கட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 06 | 06 | கோவிலாக் கண்டி | திருமதி சு.கஸ்தூரி | கந்தையா கனகம்மா நிதிய கட்டடம் அருகில் பொது நூலக மண்டபம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 07 | 07 | கைதடி நாவற்குழி | செல்வி ந.கோபினா | முருகன் கோவில் மண்டபம்/ சிறிமுருகன் சனசமூ நிலையம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 08 | 08 | மறவன்புலோ | திருமதி சு.பிருந்தா | சங்க கிளைக் கட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 09 | 09 | தனங்கிளப்பு | திருமதி நி.ஜிவானி | பண்டிதமணி பாலர் பாடசாலை மண்டபம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 10 | 10 | கைதடி நாவற்குழி தெற்கு | திரு.ச. சசீந்திரன் | சங்க கிளைக் கட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |
| 11 | 11 | கோவிலாக் கண்டி மத்தி | திருமதி ர.சிவகௌரி | செல்வா சனசமூக நிலையக் கட்டடம் | 02.12.2023 | மு.ப.10.00 |

**சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கூட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

**ஒப்பம் - திரு.கி.சந்திரசேகரன்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**அலுவலகம்,**
**இல.857, கே.கே.எஸ். வீதி, யாழப்பாணம்.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
18 . 08 . 1948

**மறைவு**
28 . 11 . 2023



## திருமதி இராசரத்தினம் செல்வராணி

மயிலிட்டி வடக்கு காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும், அம்பாள் வீதி நாயன்மார் கட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் செல்வராணி அவர்கள் கடந்த (28.11.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித்தம்பி கதிராசி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நிற்சிங்கம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசரத்தினத்தின் அன்புத்துணைவியாரும், இராசகாந்தன் (பிரான்ஸ்), செல்வகுமாரி (ஜேர்மனி), இராசகுமார் (பிரான்ஸ்), செல்வநாயகி (அமெரிக்கா), விஜயகுமாரி (சமூகசேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), இராசரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜிதா (பிரான்ஸ்), சிவநாதன் (ஜேர்மனி), கவிதா (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (அமெரிக்கா), முகுந்தன் (விரிவுரையாளர் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், வேலணை), அனித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், சுப்பிரமணியம், புஸ்பராணி மற்றும் தெய்வராணி, புஸ்பதேவன் (இளைப்பாறிய தபால் தரம்பிரிக்கும் உத்தியோகத்தர் - MSO), சின்னத்தங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவசம்பு ஜெயலட்சுமி, அருந்தவநாதன், சின்னத்தம்பி மற்றும் சிவனேஸ்வரி செல்லத்துரை, வேலுப்பிள்ளை, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரஜீவன், வினோஜன், வைஷ்ணவி, விபூசன், விதுர்சன், அனுசா, ருக்ஷினி, லக்ஷினி, ஆகாஷ், லோஜன், டிலக்ஷன், காயத்திரி, திவ்யன், பிரவினா, கர்ணி, ஜனனி ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2023) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**83, அம்பாள் வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**யாழ்ப்பாணம்**

(CS 27136)(AK-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 655 20[illegible]**



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் - 2024

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்ட வர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2023 ஆம்ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்பமுடிவுக் காலம் 01.12.2023 தொடக்கம் 31.12.2023 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.**

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும் கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்2024"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதிவான், இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 432 3440/ 021 432 3447 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.**

**செயலாளர்,**
**ந.மோகனரூபன்**
**அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு**

### முதலாவது அட்டவணை - (படிவம் - 01)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்............... ஆம் ஆண்டு**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :......................................
2. பிறந்தநாள் :......................................
3. இந்து சமயத்தவரா?......................................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் வழிபடுபவரா? :-......................................
5. நீங்கள் உறுப்புரிமை 03(2)(ஏ) அல்லது 03(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின்,இந்த ஆண்டு கோயிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :- .... ......................................
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற் கட்டளையின் விபரம் :

காசுக்கட்டளை / த.க இல ......................... அலுவலகமும் வழங்கிய நாளும் ......................... தொகை .................

நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
இந்தக் கோயிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
இக்கோயிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு, வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

.................................
விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ................ ஆம் ஆண்டு ............ மாதம் ............ நாளன்று ............ என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார், என்பதை உறுதிசெய்கின்றேன்.

என் முன்னிலையில்

.................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு** :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்து மத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
20...... .12.31ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### இரண்டாம் அட்டவணை - (படிவம் - 02)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**

**2024 ஆம் ஆண்டு**

**செயலாளர்,**
**அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

**அன்பார்ந்த ஐயா,**

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

..................ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.......... அஞ்சலகத்தால் .................. ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட......................... இலக்கங்கொண்ட காசுக் கட்டளை / தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் : ......................................
முகவரி : ......................................
எனக்குள்ள உபயம்:......................................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :......................................

.................................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .................... ஆம் ஆண்டு ................ மாதம் ................ நாளன்று ............ என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

என் முன்னிலையில்

.................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு :-** விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்து மத குரு , இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

20...... .12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

கச்சாய் வடக்கு கொடிகாமம் எனும் விலாசத்தில் வசிக்கும் **விக்னேஸ்வரன் பகீராஜ்** 19942020828 ஆகிய நான் இன்றுமுதல் எனது முதற்பெயரை **யோகித்** என பெயர்மாற்றம் செய்கிறேன் என்பதை இலங்கை சோசலிச மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

**யோகித்**



## தவறவிடப்பட்டது

கல்வயல் பெருங்குளம் வீதி, குகன் மில் முன் ஒழுங்கையில் கார் திறப்பு தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**T.P: 077 881 4542**


# சட்டவிரோதமாக மீன்பிடி; மன்னாரில் 12 பேர் கைது

மன்னார், டிசெ.1

மன்னார் சிலாவத்துறை கொண்டச்சிக்குடா கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 12 பேர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது இந்தக் கைது இடம்பெற்றது. 4 டிங்கிப் படகுகள், சுமார் ஆயிரத்து 670 கடல் அட்டைகள் மற்றும் சட்டவிரோத டைவிங் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கல்பிட்டி, சிலாவத்துறை, வங்காலை மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் மேலதிக சட்டநடவடிக்கைக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

(ச-213)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2023 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி ப.கிருஷ்னி**
**(160 புள்ளி)**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா குடும்பத்தினர்.**

"வசந்தம்"
கண்டி வீதி, சாவகச்சேரி.

(CS 27145)A-1



## கரைத்துறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.
## கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான கடைகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்வி மனு கோரல் அறிவித்தல்

முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான 01 தொடக்கம் 13 வ ரையான கடைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்போரிடமிருந்து நீண்டகால குத்தகையிடல் வாடகைக்கு விடுவதற்கான கேள்வி மனுப் பத்திரங்கள் 01.12.2023 ஆம் திகதி முதல் 20.12.2023 ஆம் திகதி வரையான 14 வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை கரைத்துறைப்பற்று பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் விநியோகிக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளித்து கேள்வி மனுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அத்துடன் குடும்ப அட்டை ஆகியவற்றின் மூலப்பிரதியையும் நிழற்படப்பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும். கேள்விமனு ஆனது 21.12.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் தனித்தனியாக செயலாளர் கரைத்துறைப்பற்று பிரதேச சபை முல்லைத்தீவு என்னும் முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் மூலப்பிரதி / இணைப்பிரதி என குறிப்பிடுவதுடன் "முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய கடை இல ....... என தெளிவாகக் குறிப்பிட்டு இரு விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறைகளையும் "செயலாளர், கரைத்துறைப் பற்று பிரதேச சபை, தலைமை அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு இதற்கென தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 21.12.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு முன் இடுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் 21.12.2023 அன்று முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் பதிவுத்தபால் மூலம் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி அட்டவணை

| கடை இலக்கம்/ விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| கடை இல 01 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 02 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 04 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 05 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 06 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 07 | ரூபா. 1,920,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 08 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 09 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 10 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 11 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 12 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 13 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |

**செயலாளர்,**
**கரைத்துறைப்பற்று பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம்,**
**முல்லைத்தீவு"**
**01.12.2023.**


# கர்தினாலுக்கு பிக்குகள் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 1

போர்க்காலத்தில் புலிகளின் கொடியை தொட்டு அருட்தந்தையர்கள் ஆசிர்வதிக்கும் போது பேராயர் எங்கு இருந்தார்? பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை அவர் விமர்சித்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - இவ்வாறு பௌத்த தேரர்கள் சிலர் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம், நியமிக்கப்பட்டார்.

பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க மதகுருமார் தம் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் பௌத்த பிக்குகள் சிலர் கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பொன்றை நடத்தினர். கத்தோலிக்க திருச்சபையின் கூற்றை வன்மையாகக் கண்டித்தனர். அபயராம விகாரையின் விகாராதிபதியான முருத்தெட்டுவே ஆனந்த தேரர், 'கத்தோலிக்க சபையின் கருத்தை கண்டிக்கின்றோம். யார் என்ன சொன்னாலும் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி, பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக் குமாறு கோருகின்றோம்' - என்றார்.

இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் கருத்து வெளியிடுகையில்,

'போர்க் காலத்தில் தலதாமாளிகை மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். ஆனால் அருட்தந்தையர்கள் சிலர் புலிக்கொடியை தொட்டு ஆசிர்வாதம் வழங்கினர். மேலும் சில அருட்தந்தையர்கள் நாட்டுக்கு எதிராக ஜெனீவா செல்கின்றனர். அருட்தந்தையர்கள் இவ்வாறு செயற்படும்போது பேராயர் எங்கு இருந்தார்? நாட்டுக்குள் பிளவை ஏற்படுத்தி தமது அரசியல் தேவையை பூர்த்திசெய்ய முற்படக் கூடாது. பாதுகாப்புத் தலைமைய கத்தை கத்தோலிக்க திருச்சபைக்கு தான் கொண்டுசெல்லவேண்டும் போலும்' - என்றார்.

(அ-ம-44)

# நூற்றாண்டு ஒளிவிழா கலாசாலையில் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 1

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் கே. ஜே.பிறெட்லீ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(அ-ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கொக்குவிலில் அமைந்துள்ள
உணவக ஒன்றிற்கு சமையல்
உதவியாளர் தேவை
**பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது**

தொடர்பு : **077 496 1233** cs53012 (AK-1)


# மோசடியாளர்களைத் தெரிவு செய்யாதீர்

## மார்ச் 12 இயக்கம் வலியுறுத்து

அரசியல் கட்சிகள் தேர்தல் காலத்தில் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும்போது இலஞ்ச ஊழலற்ற வேட்பாளர்களைத் தேர்வு செய்ய வேண்டும் என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் மார்ச் 12 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவருமான ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேட்பாளர் ஒருவர் குற்றவியல் குற்றங்களை புரியாதவராக இருப்பதோடு இலஞ்ச ஊழல் அற்றவராக இருக்க வேண்டும். சுற்றாடலுக்கு எதிரான உடன்படிக்கைகளை மேற்கொள்ளாதவராக இருப்பதோடு தொகுதி மக்களுடன் சிறந்த தொடர்பாடல் உடையவராக இருக்க வேண்டும். மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் இளையோருக்கு உரிய இடங்களை வழங்கக்கூடிய கட்சியாக இருக்க வேண்டும்.

இவ்வாறான ஏற்பாடுகளைப் பின்பற்றும் அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் வேட்பாளர்களுக்கு பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும் - என்றார். (ஒ-20)


# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 - 02 - 1957



மறைவு
01 - 12 - 2017

## அமரர் சிங்காரவேலு யோகநாதன்

(உரிமையாளர் - Ogesta)

திதி: துவாதசி

ஆண்டுகள் ஆறு ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**185/1, கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**021 221 6742**

(CS 27144) A-1



# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
28 . 02 . 1928



இறப்பு
29 . 11 . 2023

எமது வளர்மதி நிறைவாழ்வகத்தின் மாணவர் கல்வி அபிவிருத்தி திட்டத்திற்காக எம்முடன் இணைத்து கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பெரும் நிதிப்பங்களிப்பு வழங்கி வரும் யாழ் பல்கலைக்கழகம் 1981ம் ஆண்டு விஞ்ஞானப்பிரிவு அணியினரின் UK இணைப்பாளராக செயற்படும் திரு. **இராஜதுரை ஜெயரூபன் (UK)** அவர்களின் அன்புத் தாயார்

## இராஜதுரை சிவக்கொழுந்து (மானிப்பாய்)

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது வளர்மதி சமூகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

**வளர்மதி நிறைவாழ்வகம்**
**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்**

**சம்பியன்லேன்,**
**கொக்குவில்.**



# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**22.04.1942**

**மறைவு**
**28.11.2023**

## திருமதி கனகமலர் நற்குணம்

யாழ் காரைநகர் நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும், கனடா Scarboroughவை வசிப்பிடமாகவும், நல்லூரை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமலர் நற்குணம் அவர்கள் கடந்த (28.11.2023) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை (பிரபல கந்தானைக் கந்தையா) நேசரத்தினம் தம்பதிகளின் சிரேஷ் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்து நற்குணம் (முன்னைநாள் கந்தானை பிரபல வர்த்தகத் - Wimalendra Brothers) அவர்களின் அன்பு மனைவியும், தனநாயகி, முத்துராசா, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் தனலட்சுமி, புனிதவதி, சுந்தராம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலேந்திரன் (லண்டன்), மகேந்திரன் (கனடா), பாலேந்திரன் (கனடா), சிவபாக்கியம், ஆறுமுகம் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயலட்சுமி (லண்டன்), ரேணுகா (கனடா), குமுதினி (கனடா) ஆகியோரின் பாசமுள்ள மாமியாரும், ஜெயன் (லண்டன்), சுகந்த் (லண்டன்), ஆரணி (கனடா), அசான் (கனடா), தர்மியா - சாய்கஜன் (கனடா), ஸ்ரீரங்கா - பிருந்தா (கனடா), சரண்யா - சௌமியன் (கனடா), கேசியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லம் இல.396, கோயில் வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**பாக்கியம் (பெறாமகள்)**
**(077 404 5904)**
**செந்தூரன் (பெறாமகன்)**
**(077 160 3314)**

**இலக்கம் 396,**
**கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(CS 27137) (AK-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வற்றாப்பளை ம. வி. தேசியத்தில் தங்கம்

தேசிய மட்டத்தில் நடைபெற்ற பரதநாட்டியப் போட்டியில் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலய வரிப்புலி அணியினர் முதலிடத்தைப் பெற்றுச் சாதனையீட்டியுள்ளனர்.
இந்தப் போட்டிகள் அண்மையில் அநுராதபுரத்தில் இடம்பெற்றன. (ச-75)

## சிறுவர்கள் திறன் விருத்தி மன்னாரில் செயற்றிட்டம்

கல்வி அமைச்சுடன் இலங்கை ரோட்டரிக் கழகம் இணைந்து சிறுவர்களுக்கான Little Minds Strong Values எனும் திட்டத்தை மன்னாரில் முதல் தடவையாக அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.
காணொலிப்பாடல்கள் மூலம் "குழந்தைகளுக்கு தார்மீக நெறிமுறைகள், மாண்புகளை கற்றுக் கொடுத்தலும் மற்றும் ஒரு புதிய இலங்கையை உருவாக்க உதவுதலும்" எனும் கருப்பொருளில் இந்தச் செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. (ச-213)



அகில இலங்கை நடனப் போட்டியில் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம் புத்தாக்க நடனத்தில் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளது. (ச-159)





## கைதடி அ.த.க. தேசிய சாதனை

அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை பரத நாட்டிய, கர்நாடக சங்கீதப் போட்டிகளில் கைதடி அ.த.க.பாடசாலை மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். இதில் பங்கேற்ற கைதடி அ.த.க.பாடசாலை புத்தாக்க நடனத்தில் முதலாம் இடத்தையும் பதம் தனி இசையில் து.ரஜிசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-159)



## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கட்டளைத்தளபதி பிரிகேடியர் ஹெட்டி ஆராய்ச்சியின் எண்ணக்கருவுக்கமைய 9 பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.
தருமபுரம் இலக்கம் ஒன்று பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கரைச்சிப் பிரதேச செயலாளர், கண்டாவளைப்பிரதேச செயலாளர், கிளி. வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)





மானிப்பாய் இந்துக்கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் ஆணையாளரும் கல்லூரி அதிபருமாகிய செ.இளங்கோ தலைமையில் இடம்பெற்றது. (ச)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. மருத்துவமனையை உடன் தரமுயர்த்துங்கள்

## முன்னாள் எம்.பி. சரவணபவன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ.1**

**வட்டுகோட்டை பிரதேச மருத்துவமனையின் தேவைகள் நிறைவேற்றப்பட்டு 'சி' தரத்திலிருந்து 'பி' தரத்துக்கு உயர்த்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.**



வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு நேரில் சென்று கள நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மருத்துவமனை சார்பில் பல கோரிக்கைகள் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அவை நிறைவேற்றப்படவில்லை. அவசர சிகிச்சைப் பிரிவுக்குரிய கட்டில் கூட இல்லை.

எங்களுடைய வட்டுக்கோட்டை மருத்துவமனையின் தற்போதைய நிலைமைகளை சுகாதார அமைச்சரை நேரில் சந்தித்து தெளிவாக எடுத்துக் கூறினால் தரம் உயர்த்துவதற்கு வாய்ப்புள்ளது.

வட்டுக்கோட்டை பிரதேச மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த மருத்துவமனைக்கு புலம்பெயர் மக்களும் உதவவேண்டும். நானும் என்னுடைய பங்குக்கு உதவிகளைச் செய்கின்றேன். அதிகளவு மக்கள் வாழுகின்ற இந்தப் பிரதேசத்தில் மருத்துவமனையினுடைய வசதிகள் போதாது. மருத்துவமனையை தரம் உயர்த்தி உரிய வசதிகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் - என்று அவர் தெரிவித்தார். (ஒ-125)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 1


இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் கற்கைநெறிகளுக்கு போதனாசிரியர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பம் செய்வதற்கான கல்வித்தகைமையாக க.பொ.த. சாதா ரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத் தல், தொழில்சார் தகைமைகளாக மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் என்.வி.கியூ-5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழுடன் 1 வருடம் கற்பித்தல் அனுபவம் இருத்தல், சம்பந்தப்பட்ட துறையில் பட்டச் சான்றிதழ் 1 வருடம் கற்பித்தல் அனுபவம் இருத்தல், அனுபவ ரீதியாக சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்துக்கு மேலான தொழிற்றுறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ரி)

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்



### நடராசா கனகரத்தினம்

**(உரிமையாளர், அசோக் தொழிற்சாலை-சுன்னாகம்)**

ஏழாலை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கனகரத்தினம் (உரிமையாளர், அசோக் தொழிற்சாலை-சுன்னாகம்) நேற்று (30.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா விசாலாட்சி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், நவநிதியின் அன்புக் கணவரும், டயாணி (லண்டன்), அசோக் (பஹ்றின்), துளசி (சுவிஸ்), கஜன் (பிராந்திய முகாமையாளர் Assetline) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மசீலன், மலர்விழி, சாந்தகுமார், ரேவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவின், பிரீத்திகா, ஷாறிணி, மர்வின், கெவின், றித்திகா, யெஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவமலர் மற்றும் கணேசலிங்கம், சறோசனா, மல்லிகாதேவி, தனேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுசீலாதேவி மற்றும் மதனதாசன், றமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாவதி, காலஞ்சென்றவர்களான பரம்ஜோதிநாதன், நாகராசா மற்றும் கணேசலிங்கம், இந்திரபவானி, சுதாநிதி, சிவாஜினி, ஜெயகௌரி (லண்டன்) காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் தயாளகுமார், நவரஞ்சன் (கனடா), ஜெயநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
076 382 0617 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
07
12
1942



மறைவு
29
11
2023

### நாகேந்திரர் இராமச்சந்திரன்

**(நெடுந்தீவின் ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபரும்,
நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும்)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவு, கனடா, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நெடுந்தீவின் ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபரும், நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான நாகேந்திரர் இராமச்சந்திரன் அவர்கள் கடந்த (29.11.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் கிராம சபை தலைவரும், முன்னைநாள் நெடுந்தீவு விதானையாருமான சுப்பிரமணியம் - நாகேந்திரர் (கொடிவேலி விதானையார்) நா.செல்லம்மா (இலங்கையில் முதல் கிராம சபைத் தலைவி-நெடுந்தீவு) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகபூஷணி அவர்களின் அன்புக் கணவரும், நாகநாதர் அவர்களின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (கிராமசேவையாளர்), அமிர்தரட்ணராஜா (ஓய்வுநிலை அதிபர்), இராம நாதன் (பொறியியலாளர்), செல்வரட்ணம் (எழுதுவினைஞர்) மற்றும் நவயோகம் (ஆசிரியர்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி (ஆசிரியர்) மற்றும் நாகேஸ்வரி (ஆசிரியர்), காலஞ்சென்ற இலட்சுமணராசா (உதயன், வீரகேசரி பத்திரிகை ஊடகவியலாளரும், முன்னாள் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சற்குணம் (ஆசிரியை), அமிர்தயோகம் மற்றும் அன்ன லட்சுமி, ஞானாம்பிகை, யோகம்மா (ஆசிரியை), நரேந்திரநாதன், காலஞ்சென்ற வர்களான கந்தையா (கிராம சேவையாளர்), சுவாமிநாதன், கௌரி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நெடுந்தீவு கிழக்கு கொடிவேலி அறிவாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுராமன் சல்லி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அ.பொன்னம்பலம்-076 3726826
க.கேதீஸ்வரநாதன்-077 6592424
கு.ரஜனி-077 1349443

தகவல்: சகோதரர்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் குருபூசை

நாவலர் பெருமானின் 144 ஆவது குருபூஜை நிகழ்வு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கலாவித்தகர் திருமதி மா. அனந்தலெச்சுமியின் திருமுறைப் பாராயணமும், நவாலி கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆனைப்பந்தி, குருகுலத்தில் நடத்தப்பட்டு வரும் புராணபடன வகுப்பு மாணவர்களின் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ரி)

# கழிவகற்றலுக்குத் தடை; மக்களுக்குப் பெரும் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 1

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, பாப்பாமோட்டையில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் மலக்கழிவு மற்றும் திண்மக் கழிவுகளை கொட்டிச் சேகரிக்க கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் கடந்த 23ஆம் திகதி தடை விதித்துள்ளது.

இதனால் மன்னார் நகரசபையால் முன்னெடுக்கப்பட்ட கழிவு சேகரிப்பு உடனடியாக நிறுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், சுமார் 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 2012ஆம் ஆண்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக அமைக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் மன்னார் நகரசபையிடம் கையளிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு முதல் மன்னார் நகரசபை பிரிவில் சேகரிக்கப்படுகின்ற திண்மக்கழிவுகள் மற்றும் மலக் கழிவுகள் அகற்றப்பட்டு அங்கு கொண்டுவரப்பட்டு பாதுகாப்பாக சேகரிக்கப்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக இந்தச் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.


கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தது.

நிலத்தடி நீர் மாசுபடுவதாகவும், அந்தப் பகுதி பறவைகள் சரணாலயத்துக்குரியது எனவும் தெரிவித்து கடந்த 8ஆம் திகதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கிலேயே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் மருத்துவ மனை தரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை மீளப் பெற்றுக்கொள்ள மன்னார் நகர சபை எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது. மன்னார் நகரசபைக்குரிய இந்தக் காணி, பறவைகள் சரணாலயத்துக்குச் சொந்தமானதாக அடையாளம் காணப்பட்டு 2016ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

(ஒ-56)



### வயோதிபத்...

செட்டிகுளம் பிரதான வீதியில் குறித்த தம்பதிகளின் மகன் வியாபார நிலையம் ஒன்றை நடத்திவரும் நிலையில், அதற்குப் பின்னால் உள்ள தங்கும் இடத்தில் குறித்த தம்பதியர் வசித்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு வழமைபோல அவர்களது மகன் வியாபார நிலையத்தை மூடிவிட்டு அண்மையில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். இதன் போது குறித்த தம்பதியர்வியாபார நிலையத்துக்குப் பின்பாகவுள்ள தங்குமிடத்தில் உறங்கச்சென்றுள்ளனர். இந்த நிலையில் நேற்றுக்காலை வியாபார நிலையத்தை திறப்பதற்காக வந்த மகன் தனது தாயும் தந்தையும் இரத்த வெள்ளத்தில் கிடந்தமைகண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அவர்களது சடலங்களுக்கு அருகில் மூன்று கத்திகள் மீட்கப்பட்டுள்ளன. இறந்தவர்களின் உடைமையில் இருந்த 5 பவுண் தங்கச் சங்கிலியொன்றும் காணாமற்போயுள்ளது. அதேவேளை கடைக்குரிய பெருந்தொகைப் பணம் அங்கு பத்திரமாக இருந்துள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-18-75-110)

### புதுடில்லியில்...

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் புதிய நகர்வுகளை முன்னெடுக்கும் வகையிலேயே இந்தக் கலந்துரையாடல்களில் ஆலோசிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஞா.சிறிநேசன் மற்றும் சிவகுரு ஆதீன குருமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட 10 பேர் அடங்கிய குழுவினரே இவ்வாறு புதுடில்லியில் முகாமிட்டு பலதரப்பு சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து, தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு விடயம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகள் சார்பில் தமது நிலைப்பாட்டைக் கூட்டாக வலியுறுத்துவதற்கான முயற்சியை தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் அண்மையில் முன்னெடுத்திருந்தார்.

இது தொடர்பில் ரெலோ, புளொட், தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பன இணைந்து அண்மையில் கலந்துரையாடல்களை நடத்தியிருந்ததுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டு ஆவணத்தில் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு அனுப்பியிருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தக் குழுவினர் டில்லியில் முகாமிட்டு பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

### நாடாளுமன்றத்தை...

ஊடக சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.மரிக்கார் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாட்டில் பொருள்கள், சேவைகளின் விலைகள் எகிறியுள்ளன. ஜனவரியில் வற்வரி அதிகரிக்கப்பட்ட பின்னர் பொருள்களின் விலைகளில் மேலும் அதிகரிப்பு இடம்பெறும். இந்த அரசுக்கு மக்கள் ஆணை இல்லை. உள்ளூராட்சித் தேர்தல்கூட ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் ஆணையை அறிவதற்கு தேர்தல் நடத்தப்படவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தமாட்டார். தோல்வியடைய அவர் விரும்பமாட்டார். எனவே, பொதுத்தேர்தலை நடத்தி அதன்மூலம் பதவியைத் தக்கவைக்க முற்படுவார். எனவே நாடாளுமன்றத்தை உடன் கலைத்து தேர்தலுக்கு செல்லுமாறு வலியுறுத்துகின்றோம்' - என்றார். (அ-ம-44)

### பெற்றோல்...

எரிபொருள் விலை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 95 ஒக்ரேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 9 ரூபாவால் அதிகரித்து புதிய விலை 426 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சூப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 3 ரூபாவால் அதிகரித்து புதிய விலை 434 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டீசல் ஒரு லீற்றரின் விலை 27 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 329 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 247 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### வீதிகளுக்கு...

வட்டுக்கோட்டைக் கிளைத் தலைவருமான ஈ.சரவணபவன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குரூஸுக்கு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த வீதிகள் இவ்வருட இறுதிக்குள் - இன்னும் மூன்று வாரங்களுக்குள் - சீரமைக்கப்படும் என அவர் உறுதிமொழியளித்துள்ளார்.

பொன்னாலை - வட்டுக்கோட்டை வீதியில், வட்டுக்கோட்டை சந்தியில் இருந்து பொன்னாலைச் சந்தி வரையிலான பகுதியும், காரைநகர் - மானிப்பாய்- யாழ்ப்பாணம் வீதியில், வழக்கம்பரையிலிருந்து பொன்னாலைச் சந்தி வரையிலான பகுதியுமே காப்பெற் இடப்பட்டு சீரமைக்கப்படவுள்ளன. இதன்படி, இந்த வருடத்தின் இறுதிக்குள் மேற்படி சீரமைப்புக்கான நிதி விடுவிக்கப்பட்டு கட்டம்கட்டமாக வீதி சீரமைக்கப்படவுள்ளது என சரவணபவனிடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குரூஸ் உறுதியளித்துள்ளார். (அ-ம-125)

### செயலாளராக...

கனகேஸ்வரன் நிர்வாக சேவை விசேட தரத்துக்குப் பதவி உயர்வு கிடைத்த நிலையில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ம-27)

### பாக்லே...

அம்மன் ஆலயத்தினருடனும் அவர் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

(அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரு. மருத்துவமனை முன் தேங்கி நிற்கும் வெள்ளம்

## பொதுமக்கள் அவதி

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை பிரதான வாயில் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளநீரால் மருத்துவ மனைக்கு வந்துசெல்லும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனை முன்பாகவுள்ள வீதியின் புனரமைப்புப் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த பணிகள் முழுமைபெறாததால் மருத்துவமனையின் பிரதான வாயில் பகுதியினுள் மழைவெள்ளம் வடிந் தோடாமல் தேங்குகிறது.

இதனால் மருத்துவமனைக்கு தினமும் வருகைதரும் அதிகளவான மக்கள், நோயாளர்கள், மருத்துவர்கள் உட்படப் பலரும் பெரும் அசௌகரியங்களுக் குள்ளாவதுடன் சுகாதாரப் பாதிப்புக்கும் முகம் கொடுக்கின்றனர்

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இது தொடர்பில் கவனம் செலுத்தி மருத் துவமனை முன் வெள்ளநீர் தேங் குவதைத் தடுப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் மக்கள் தெரிவித் தனர். (ச-100)

## நாவலர் குருபூசை

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற் படுத்தும் வகையில் சிவஸ்ரீ. பால. குணனாந் தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுரா ணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசையில் ஓர் அங்கமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 144 ஆவது குரு பூஜை விழா சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சிவநெ றிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் நாவலர் குரு பூசையும், சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் செ. த. குமரனின் "நால்வர் நெறி யில் நாவலர்" எனும் தலைப்பிலான சொற் பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக் கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள் ளன (ரி)

**சாரதி தேவை**

கனரக. இலகுரக வாகன சாரதிகள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**சிறிகுமரன் ஹாட் வெயார்**
இல.83, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**077 320 8865**

**விற்பனைக்கு**

25 எலக்ரிக் பைக்
(Electric bike)
மொத்த விலையிலும்
சில்லறை விலையிலும்
விற்பனைக்குண்டு.

TP:071 271 8833

**வெளிநாட்டு வேலை விசா அலோசனை**
**Foreign Employment Work Permit Consulting**

கனடா மற்றும் அவுஸ்ரேலியா உட்பட நாடுகளில் வேலை விசா பெறுவதற்கான ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும் அரச, தனியார் மற்றும் வெளிநாட்டு வேலை தேடுவோருக்கானது.

தொடர்புக்கு : யாழ்ப்பாணம், வவுனியா
**077 557 4190**

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 09 . 1947



மறைவு 30 . 11 . 2023

### திருமதி சிவபாக்கியம் தர்மலிங்கம்

எழுதுமட்டுவாழை பிறப்பிடமாகவும் நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் தர்மலிங்கம் நேற்று (30.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், அமரர் நவராணி (சுவிஸ்), தவசீலன் (ஜேர்மனி), தவபாஸ்கரன், தவச்செல்வி, தவநேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசலிங்கம் (சுவிஸ்), தர்ஷிகா (ஜேர்மனி), தவக்குமார், ஈழவேணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தா, கார்த்திகேயன், கிருசிகன், மெலேனிகா, சங்கீதன், மோகீசன், தரணிகன், கஜின், கனிஷா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், அழகரத்தினம், நேசரத்தினம், யோகரத்தினம், தயாவதி, தயாரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னம்மா, தவமணி, பரிமளராணி, பரமநாதன், பாக்கியநாதன், பரமேஸ்வரி (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனிதா, அயன் (அமரர்), நிதன், அயந்தி, சுஜாதா, அஜனி (அமரர்), அருண், அனோ, கீதா, சதீஸ், துளசி, சுதன், சுமன் அமரர்களான சுகி, சுதா ஆகியோரின் அத்தையும், பானுஜன், வவி, பானுஜா, தேனுசன், துசியனன் (அமரர்), துஷாந்தி, துஷாலி, துஷா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2023) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**


**076 8539 152 (மகன்)**
**077 366 2400 (மருமகன்)**

**இல.108/5, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கணேஷமூர்த்தி (K.G.E.M)

தோற்றம்:01.11.1949 மறைவு:30.11.2023



நவாலி தெற்கு மானிப்பாயை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேஷமூர்த்தி அவர்கள் நேற்று (30.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், ஆழ்வார் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், துஸ்யந்தி (கனடா), காலஞ்சென்ற துஸ்ஜந்தன் மற்றும் பிரசன்னா (துணுக்காய் பிரதேச செயலக அபி விருத்தி உத்தியோகத்தர்) ஆகி யோரின் அன்புத் தகப்பனாரும், ரஜீத் குமார் (கனடா), கலைச்செல்வி ஆகி யோரின் அன்பு மாமனாரும், வர்சிகா, ஜதாகினி, பிரக்யா, பிரக்வீன் ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நவாலி தெற்கு,**
**மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 129 1771**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org